**செ.வெ.எண்: 44/ஆகஸ்ட்** **நாள் : 23.08.2017**

## இராமநாதபுரம் மாவட்டம்

## கால் மற்றும் வாய் கோமாரி நோய் 13-ஆவது சுற்று தடுப்பூசி பணிகள் 01.09.2017 முதல் 21.09.2017 வரை மூன்று வாரங்கள் நடைபெறவுள்ளன

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

கால் மற்றும் வாய் கோமாரி நோயானது குறிப்பாக கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. மேலும் இந்நோயினால் கறவை மாடுகளின் பால் உற்பத்தி குறைவு, எருதுகளின் வேலை திறன் குறைவு, கறவைமாடுகளின் சினைப்பிடிப்பு தடைபடுவது, இளங்கன்றுகள் இறப்பு போன்றவை ஏற்படுகிறது.

இந்நோயினை கட்டுப்படுத்த மாவட்டத்தில் இதுவரை 12 சுற்று கோமாரி நோய் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்பொழுது கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயினை கட்டுப்படுத்த 13வது சுற்று தடுப்பூசிப் பணிகள் 01.09.2017 முதல் 21.09.2017 வரை மூன்று வாரங்கள் நடைபெற உள்ளது. தடுப்பூசிப் பணிகள் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மாவட்டம் முழுவதும் உள்ள ஊராட்சிகளில் கால்நடை வளர்ப்போர்கள் தங்களது மாட்டினங்களை தவறாது தடுப்பூசி போடும் இடத்திற்கு கொண்டு வந்து தடுப்பூசி போட்டு அனைவரும் பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**